**அக்டோபர்: 03**

## நீங்கள் கேட்கிறவர்களாக மட்டுமில்லாமல் செய்கிறவர்களாயிருங்கள்.

**வாசிக்க: மத்தேயு 25:45**

கர்த்தரின் நியாயத்தீர்ப்பின் நாளின் போது. சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாக பிரிப்பது போல பிரித்து, செம்மறியாடுகளைத் தமது வலதுபக்கத்திலும், வெள்ளாடுகளைத் தமது இடதுபக்கத்திலும் நிறுத்துவார். அப்பொழுது, ராஜா தமது வலதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து: வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள். பசியாயிருந்தேன், எனக்குப் போஜனங்கொடுத்தீர்கள், தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள், அந்நியனாயிருந்தேன், என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள், வஸ்திரமில்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரங்கொடுத்தீர்கள், வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள், காவலிலிருந்தேன், என்னைப் பார்க்கவந்தீர்கள் என்பார். ஆனால் இடதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர்: சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள். பசியாயிருந்தேன், நீங்கள் எனக்குப் போஜனங்கொடுக்கவில்லை: தாகமாயிருந்தேன், நீங்கள் என் தாகத்தைத் தீர்க்கவில்லை, அந்நியனாயிருந்தேன், நீங்கள் என்னைச் சேர்த்துக்கொள்ளவில்லை, வஸ்திரமில்லாதிருந்தேன், நீங்கள் எனக்கு வஸ்திரங்கொடுக்கவில்லை, வியாதியுள்ளவனாயும் காவலிலடைக்கப்பட்டவனாயும் இருந்தேன், நீங்கள் என்னை விசாரிக்க வரவில்லையென்பார்மிகவும் சிறியவர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கு செய்தீர்கள், எதை செய்யாதிருந்தீர்களோ, அதை எனக்கே செய்யாதிருந்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார்.





எனக்கு பிரியமான பிள்ளைகளே நம் ஆண்டவர் மகிமையான ஒரு நாளில் திரள் கூட்ட தூதர்களோடு இந்த உலகத்தை நியாயந்தீர்க்க வரப்மோகிறார். அவருடைய பிள்ளைகளாக அவரை தொழுது கொண்ட ஒவ்வொருவருக்கும் அவர்களின் பலனை கொண்டு வர போகிறார். ஆனால் அந்த நாளிலே அவருடைய நாமம் தரித்திருக்கும் ஜனங்களை இரண்டு பிரிவாக பிரித்து, அவருடைய உள்ளத்தை புரிந்து செயல்பட்டவர்களை ஒருபுறமும், செயல்படாதவர்களை ஒருபுறமும் நிறுத்தி மேலே பார்த்தவண்ணமாக நியாயந்தீர்க்கபோகிறார். அவர்களெல்லாம் ஞாயிறுதோறும் திருச்சபைக்கு சென்றனர், வேதத்தை வாசித்து ஜெபித்தனர். ஆனால் அதன்படி வாழவில்லை. ஏழை எளியவர்களுக்கு மனமிரங்காமல் சுயநலமாக வாழ்ந்தனர். இந்த உவமை வழியாக நமக்கு என்ன சொல்கிறார் என்றால், ஜெபம், வேதவாசிப்பு மட்டுமே விசுவாச வாழ்க்கைக்கு முழுமையாகாது. ஆண்டவருடைய உள்ளத்தை அறிந்து செயல்படும் வாழ்க்கையே நம்மை முழுமையாக்கி அவரோடு நித்திய நித்தியமாக வாழச் செய்யும். என்ன பிள்ளைகளா, அவர் வார்த்தையின்படி வாழ அர்பணித்து ஜெபிக்கலாமா? வாங்க..!

அல்லாமலும் நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்தரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள். யாக்கோபு 1:22

**ஜெபம்**

மஹா பரிசுத்தமுள்ள எங்கள் அன்பு தகப்பனே, உங்க வார்த்தைகளை கேட்கிறவர்களாக மட்டுமில்லாமல், உம்மை போல வாழுகிறவர்களாக எங்களை மாற்றும். இயேசுவின் மகிமையான நாமத்தில் ஜெபிக்கிறேன் நல்ல பிதாவே. ஆமென்.

